(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

OS.No.444/2022 PW 1

Name மூர்த்தி

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

04.01.2024.

குறுக்கு விசாரணை

தாவா சொத்து முதலில் ஆதிகேசவனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவர் பெயரில் 616 என்கின்ற பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை எனது கையகம் ஒப்படைக்கவேண்டும் என்று வழக்கில் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வாதசாஆ 1 முதல் வாதசாஆ 3 வரை உள்ள சான்றிட்டப்பட்ட கிரையபத்திரங்களின் அசல் இந்தியன் வங்கியில் நான் அடமானம் வைத்திருக்கிறேன். இந்த விவரத்தை எனது தாவா சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். பெருமாள் நாயக்கர் சொத்தை கிரையம் வாங்கியதை காண்பிக்க நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதசாஆ 1 16.11.1968 தேதியிட்ட கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். வாதசாஆ 1 கிரைய பத்திரம் பெருமாள் நாயக்கர் ஜெயலட்சுமி என்பவருக்கு கிரைய கொடுத்த பத்திரம் என்றாலும் பெருமாள் நாயக்கர் வாங்கிய கிரைய பத்திரத்தை நான் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் நாயக்கருக்கு சுவாதினம் ஒப்படைக்கப்பட்டது என்பதை காண்பிக்க நான் ஆதாரம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2006ல் ராஜப்பா, பெரியநாயகி மற்றும் கண்ணம்மாள் ஆகியோரிடமிருந்து வாதசாஆ 3 கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கினேன். வாதசாஆ 3 கிரையம் பத்திரம் ஏற்படுவதற்கு முன்பாக உள்ள ஆவணங்களில் எனக்கு நேரிடையாக தொடர்பு கிடையாது என்றால் சரிதான். ஜெயலட்சுமியம்மாள் சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை காண்பிக்க ஆதாரம் நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். பெருமாள் நாயக்கர் அல்லது ஜெயலட்சுமியம்மாள் எந்த காலத்திலும் தாவா சொத்தில் சுவாதினம ் இருந்தது கிடையாது என்றால ் சரியல்ல. கிரையம் வாங்குவதற்கு முன்பாக 40 வருட வில்லங்கம் வாங்கி பார்த்தேன். 1940 லிருந்து வில்லங்கம் வாங்கி பார்த்தேன். வில்லங்க சான்று வாதசாஆ 6 தாக்கல் செய்துள்ளேன். 1983 லிருந்து 2022 வரைக்கான வில்லங்கம் வாதசாஆ 6ல் தாக்கல் செய்துள்ளேன். அதற்கு முந்தைய காலகட்டத்தின் வில்லங்கம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராஜப்பா கிரையம் வாங்கியது எனக்கு நேரிடையாக தெரியாது. ஆவணங்கள் மூலமாக தான் தெரியும். 1970ல் பிரதிவாதிகளின் மூதாதையர்கள் ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை வில்லங்கத்தில் 1970ல் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தனது தகப்பனாருக்கு மேற்படி பாகப்பிரிவினை மூலமாக தாவா சொத்து வந்துள்ளதாக எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். இந்த விவரம் தெரிந்த பிறகு அந்த பாகப்பிரிவினை ரத்து செய்யப்படவேண்டும் என்று நாங்கள் கோரவேண்டும் என்கின்ற அவசியம் கிடையாது. எனது அண்ணன் சுப்புராயன் கிராம தலையாரியாக இருந்தார். எனது சகோதரர் மூலமாக வருமான ஆவணங்களை மாற்றி நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை அளப்பதற்கு நாங்கள் தான் வீண்ணப்பித்தோம் பிரதிவாதி விண்ணப்பிக்கவில்லை. அதுகுறித்து பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை எதுவும் நடக்கவில்லை. 1970 லிருந்து பிரதிவாதி குடுபத்தினரின் சுவாதினத்தில் தான் சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தேக்கு மரங்க்ள் உள்ளன. இந்த விவரங்கள் எனது பிராதுதில் உள்ள சொத்து விவரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தான 28 சென்ட்டில் மரங்கள் இல்லை. (மீண்டும் சாட்சி வரப்பில் மரங்கள் உள்ளது. அந்த வரப்பும் சேர்த்து தான் 28 சென்ட் என்று கூறுகிறார்) அந்த மரங்கள் 25 வருடத்திற்கு மேற்பட்ட வயதுடைய மரங்கள் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் வந்து தாவா சொத்தை பார்த்து அளந்தபோது நானும் உடன் இருந்தேன். விவரங்களை அவருக்கு நான்

கூறினேன். அந்த அறிக்கை நீசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அனைத்துவிவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து நான் தாவா தாக்கல் செய்த சமயத்தில் மற்றும் தற்போது என்னுடைய சுவாதினத்தில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இடத்தில் உள்ள காரணத்தினால் எங்களை தாவா சொத்திற்கு போகவிடாமல் தடுக்கிறார். பிரதிவாதி தாவா சொத்தை ஆகிரமிப்பு செய்துவிட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆகிரமினம் செய்துவிட்ட காரணத்தினால் பிரதிவாதி சுவாதினத்தில் சொத்து உள்ளது என்றால் (சாட்சி ஒன்றும் தெரியாமல் விழித்தார்.) தாவா சொத்திற்கு வரிகட்டியுள்ளேன். எனக்கு கிரையம் கொடுத்த கிரையதாரர்களும் மற்றும் அதற்கு முந்தைய உரிமையாளர்களும் வரி செலுத்தியுள்ளார்கள். ரசீதிகள் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வாதசாஆ 5 ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வாதசாஆ 5 தாவா சொத்திற்க்கு கிடையாது என்றால் சரியல்ல. ரசீதில் பட்டா எண் 1481 மற்றும் 859 என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ 7 விஜயலட்சுமி மற்றும் அவர் குடும்பத்தார் பெயரில் உள்ள பட்டா எண் 856ல் தாவா சொத்து சர்வே எண் 493/3 குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தாவா செர்த்தில் மூங்கில் வேலி பிரதிவாதி போட்டுள்ளார் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் என்ன விவரம் சொல்லப்பட்டது என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. தாவா சொத்து அமைந்துள்ள பாப்பரம்பாக்கத்தில் ஆதிகேசவன் பெயரில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஜெயலட்சுமியம்மாள் கிரையம் வாங்கிய வாதசாஆ 1 பத்திரத்தில் அதே ஆதிகேசவன் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்று நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். அவர் கையொப்பம ்செய்பவரா அல்லது கைரேகை வைப்பவரா விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதியின் தாத்தா பெயர் ஏழுமலை ஆகும். அவரது தகப்பனார் பெயர் கண்ணப்பன் என்றால்

சரிதான். பிரதிவாதியின் எதிர் வாதுரையில் என்ன விவரம் சொல்லப்பட்டது என்று எனக்கு தெரியாது. எதிர்வாதுரையில் சொல்லப்பட்டுள்ள சில ஆவணங்கள் குறித்து நான் தெரிந்து கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆதிகேசவன் பெருமாள் என்பவரிடமிருந்து அதே 1968ல் கிரையம் வாங்கினார். அந்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. அதை நர்ன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கிழக்கு பக்கம் யாருடைய சொத்து என்று எனக்கு தெரியாது. வடக்கு மற்றும் மேற்க்கு பக்கம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து ஆகும். அதன் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. தெற்க்கு ப்க்கம் தசரதன் என்பவருக்கு சொந்தமான இடம் உள்ளது. ஆதிகேசவனின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மூதாதையார்கள் 1970 லிருந்து தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதி தற்போது தான் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து அருகே எனக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது. அதன் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. 2006ல் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. நான் கிரையம ்வாங்கிய பத்திரம் எவ்வளவு ஸ்டாம்ப் பத்திரம் என்று எனக்கு ஞாபகமில்லை. ரவி என்பவரும் மற்றொரு நபரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். அச்சுஅடிச்ச பத்திரம் அது. எவ்வளவு கிரைய தொகை கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நீதிமன்றம் கட்டணம் இந்த வழக்கில் நான் குறைவாக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா என் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா நான் தாக்கல் செய்யவில்லை வங்கியில் உள்ளது. என் பெயரில் உள்ள வரி ரசீதுகள் தாக்கல ்செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தை தனது சொத்துடன் இணைத்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்குள் மத்தியஸ்தம் நடந்ததாக நான் சொல்லியுள்ளது தவறானது. காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தோம். பாகப்பிரிவிணை பத்திரத்தில் பிரதிவாதி தாமாக தாவா சொத்தை இணைத்துகொண்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில்

நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி செல்வத்தற்கு மட்டும் தான் தாவா சொத்து சொந்தம் என்றால் சரியல்ல.